1989 அக்டோபர் 31]

மாண்புமிகு திரு. துரைமுருகன் :

(அ) மற்றும் (ஆ) மழைக் காலங்களில் தேக்கம் ஏற்படுகிற பொழுது, சாலையில் இருக்கிற நீரை வெளியேற்றிவிட்டு போக்கு வரத்துக்கு இடைஞ்சல் இல்லாமல் அரசு பார்த்துக் கொள்ளும்.

திருமதி யசோதா செல்லப்பா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 1977 ஆம் ஆண்டு முன்னாள் எம்.எல்.ஏ., மறைந்த என் கணவர் இதே கேள்வியை இந்த மாமன்றத்திலே கேட்டிருக்கிறார்கள். இதுவரை எந்த நடவடிக்கையும் இல்லை. மழைக் காலங்களில் அங்கு தேங்கும் நீரால், போக்கு வரத்து வாகனங்களும் பேருந்துகளும் பாதிக்கப்பட்டு போக்கு வரத்து தடைப்பட்டுக் கொண்டிருக்கிறது. அதனால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்குத் தக்க நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, ஓரிடத்தில் மேம்பாலம் கட்டுவது என்றால், எவ்வளவு வாகனங்கள் போகின்றன என்ற கணக்கு எடுக்க வேண்டும். அதன் அடிப்படையில் தமிழ்நாட்டில் இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு கணக்கெடுக்கிற வேலைகளைத் துரிதப்படுத்தி இருக்கிறோம். எனவே அந்த விவரம், குறிப்பாக இந்தக் கேள்வியைப் பொறுத்த வரையில் இன்னும் வரவில்லை. ஆனால், அதே நேரத்தில் அது வரையில் போக்குவரத்து தடையில்லாமல் பார்த்துக்கொள்ள எல்லாவிதமான முயற்சிகளும் எடுத்துக்கொள்ளப்பட வேண்டும். எடுத்துக் கொள்ளப்படும். புள்ளி விவரக் கணக்கு கிடைத்த பிறகு மேற்கொண்டு பாலம் கட்டுவது குறித்து இந்த அரசு பரிசீலிக்கும்.

திருமதி யசோதா செல்லப்பா : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியதற்கு மிகவும் நன்றி.

இராசபாளையத்தில் தொழிற்பேட்டை அமைத்தல்.

* 3107. திரு. வி. பி. இராசன் :

மாண்புமிகு சமூக நலம் மற்றும் ஊரகத் தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) இராசபாளையத்தில் தொழிற்பேட்டை அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

மாம்பழம் பதனிடும் தொழிற்சாலை.

*3122. **திரு. எல். மூக்கையா:**

மாண்புமிகு சமூகநலம் மற்றும் ஊரகத் தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

பெரியகுளம் பகுதியில் மாம்பழத்தைப் பதனிடும் தொழிற்சாலை அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : தலைவர் அவர்களே,

இல்லை.

திரு. எல். மூக்கையா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரியகுளம் பகுதியில் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களில் ஏராளமான மாம்பழம் விளைகிறது. அந்தப் பகுதியில் மாம்பழம் பதனிடும் தொழிற்சாலை அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : தலைவர் அவர்களே, தற்போது அப்படிப்பட்ட செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை. பெரியகுளம் பகுதியில் அந்தத் தொழிற்சாலை அமைப்பதற்குத் தேவையான மாம்பழ உற்பத்தி போதுமான அளவிற்கு இருக்கிறது என்று ஆராய்ந்து முடிவெடுத்ததற்குப் பிறகு வேண்டுமானால் உறுப்பினருடைய கோரிக்கையை அரசு தீர்க்கும்.

திரு. எல். மூக்கையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பகுதியில் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களில் ஏராளமான மாம்பழம் விளைவிக்கப்படுகிறது. விளைவிக்கப்படுகிற அந்த மாம்பழங்களை, பெங்களூர், இந்தூர், நாக்பூர், பம்பாய் போன்ற வெளியூர்களுக்குச் சென்று விற்க வேண்டிய நிலை இருக்கிறது. வெளியூர்களுக்கு மாம்பழங்களை அனுப்புவதால் அதிகச் செலவு ஏற்பட்டு விவசாயிகளுக்குக்